<u>**பொன்னேரி நகராட்சி**</u>
<u>**நகர்மன்ற அவசரக் கூட்டம்**</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு ஜுன் மாதம் **15.06.2023** வியாழக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

<u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>

<u>**பொருள் எண் 1**</u>

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் எண்.**59**, பொன்னேரி 2 கிராமம் புல எண் 265/9 மொத்தப்பரப்பு **0.14.00** ஹெக்டேர் மயானம் வகைப்பாடு கொண்ட நிலத்தில் **0.00.72** ஏர்ஸ் பரப்பளவில் நியாயவிலைக்கடை அமைக்க கூட்டுறவு துறைக்கு வருவாய் நிர்வாக நிலை ஆணை எண் 23 ( A) ன்கீழ் நிலமாற்றம் செய்ய பிரேரணை அனுப்பி வைக்குமாறும், மேற்படி இடத்தில் நியாயவிலைக்கடை அமைக்கவும் நகராட்சி நிர்வாகத்தின்மூலம் தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்குமாறு பொன்னேரி வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண் 861/2023/ஆ**1** நாள் **12.06.2023** வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது . மேற்படி இடத்தில் நியாய விலைக்கடையை பயன்பாட்டிற்கு கொண்டுவர கூட்டுறவு துறைக்கு மேற்படி நிலத்தினை நிலமாற்றம் செய்திடவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண். **657** /2023/அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 235 நாள்: **15.06.2023**

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

<u>**பொருள் எண் 2**</u>

பொன்னேரி நகராட்சியின் **2022**-23 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.
( ந.க.எண் **658** /**2023** /அ**1**)

நகர்மன்ற தீர்மான எண்: 236 நாள்: **15.06.2023**

**தீர்மானம்:: மன்றம் பதிவு செய்கிறது**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.